செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 102 நாள் : 20.2.17

# செய்திக் குறிப்பு

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், வேலூர் பிரிவின் மூலம் 2016–17ம் ஆண்டில் 10 முதல் 14 வயதுக்குட்பட்ட 20 மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டுத் திறமைகளைக் கண்டறிந்து பயிற்சியளிக்கும் திட்டத்தின்கீழ் (Talent Hunting Camp) வேலூரில் மாணவ, மாணவியர்களைத் தேர்ந்தெடுத்து முகாம் நடத்தப்பட உள்ளது.

- மேற்குறிப்பிட்ட பயிற்சி முகாமிற்கான தேர்வுப் போட்டிகள் (Selection Trials for Talent Hunting Camp) வேலூர் மாவட்டத்தில் 22.02.2017 அன்று காலை 9.00 மணியளவில் நேதாஜி விளையாட்டரங்கில் நடத்தப்பட உள்ளது.
- இதில் 10 முதல் 14 வயதுக்குட்பட்ட 20 மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டுத் திறமைகளைக் கண்டறிந்து பயிற்சியளிக்கப்படும். பள்ளி மாணவ, மாணவியர் மற்றும் மாணவரல்லாதோர் இதில் பங்குபெற்று பயன்பெறலாம்.
- பளுதூக்கும் விளையாட்டில் மாதத்திற்கு 25 நாட்களுக்குமிகாமல் (ஞாயிற்றுக்கிழமைகளைத் தவிர்த்து), மாலை நேரங்களில் பயிற்றுநர்கள் மூலம் நேதாஜி விளையாட்டரங்கில் முறையான பயிற்சியளிக்கப்பட உள்ளது.
- இம்முகாமில் பங்கு பெறுவோருக்கு சீருடை, சத்தான உணவு, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உள்ளூர் விளையாட்டுக்களில் பங்குபெறும் சமயம் சென்று வருவதற்கான பயணச் செலவு, நுழைவுக் கட்டணம் போன்றவை வழங்கப்பட உள்ளது.
- இது ஒரு முன்னோடித் திட்டமாகும். இதில் தேர்ந்தெடுக்கப்பட உள்ள மாணவர்கள் பளுதூக்கும் விளையாட்டில் தங்கள் திறமைகளை மேம்படுத்தி சர்வதேச மற்றும் தேசிய அளவில் பதக்கங்களை வெல்லும் நோக்கில் பயிற்சியளிக்கப்படும்.
- ஏற்கெனவே ஆணையத்தால் நடத்தப்பட்டு வரும் திட்டங்களான சர்வதேச திறனாளர்களைக் கண்டறியும் திட்டம், விளையாட்டு விடுதித் தேர்வுகள், அகாடமிக்கள் போன்றவற்றில் பங்குபெற்ற மாணவ, மாணவியர்களுக்குத் தேர்வின்போது முன்னுரிமை அளிக்கப்படும்.
- மாணவ, மாணவியர்கள் வயதின் அடிப்படையில் உடற்திறன் தகுதித் தேர்வு நடத்தி அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- தேர்வின்போது கலந்துகொள்ள விரும்பும் பள்ளி மாணவ, மாணவியர் பள்ளியில் தாங்கள் படித்துவருவதற்கான சான்றிதழைப் பள்ளித் தலைமையாசிரியரிடம் பெற்று அதனை மாவட்ட விளையாட்டு அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை அலுவலக நேரங்களில் 0416–2221721 அல்லது 7401703483 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர்

செ.ம.தொ.அ